திருமறைநூல் நாடக வரிசை – 5

# பூசலும் புகழும்



# பூசலும் புகழும்

எழுதியவர்
**இன்பராஜன்**

நாடகப்பிரதியாக்கப் பகுதி
திருமறைக்கலாமன்றம்

அட்டைப்படம் ரமணி
படங்கள் உள்ளே: சாமி
வடிவமைப்பு: கணேஷ்

**CENTRE FOR PERFORMING ARTS**

# திருமறைக் கலாமன்றம்

## திருமறைநூல் நாடக வரிசை

## பூசலும் புகழும்

திருமறைநூல் உலகப்பொதுமை வாய்ந்தது! பல் மொழி மக்களும் படித்து இன்புறும் தகமை வாய்ந்தது! அதில் ஆய்வுக்குரியவை ஆயிரமாயிரம் இருப்பினும், ஆழமான, ஆணித்தரமான, சிந்தனைகளைத்தூண்டும் அமுத ஊற்றாகவும் அது விளங்குகிறது.

இத்தகைய தலைசிறந்த இலக்கியத்தை நாடக வரிசை நூல்களாக்கி நற்றமிழ் உலகிற்கு நல்கவேண்டும் என்ற நல்லெண்ணம் நம்முள் பல்லாண்டு துளிர்த்திருந்தது. இளைய வயதினரும், முதியவரும், கற்றவரும், மற்றவரும் நாடக உருவத்தில் திருமறைநூலையும் படித்துப் பயன்பெறவேண்டும் என்ற அக் கனவு இப்போது நிறைவு பெறத் தொடங்கியுள்ளது.

திருமறை நூல் முழுவதையும் முதலில் இருந்து இறுதிவரை தொடர்வரிசையில் எழுதி வெளியிடும் பணியைத் திருமறைக்கலாமன்றம் பொறுப்பேற்றுள்ளது. இவ் அரும் முயற்சியினைத் தமிழ்கூறும் நல்லுலகம் தவறாது ஆதரிக்கும் என்ற திடமான நம்பிக்கை நமக்கு உண்டு.

பேராசியர் நீ.மரியசேவியர் அடிகள்

*இயக்குனர்.*


# முன்னுரை

பாபேல் கோபுரத்தின் அழிவைத் தொடர்ந்து நோவாவின் புதல்வனான சேமின் வேரிலிருந்து வெகுதூரம் விலகி ஓடித்துளிர்விட்டவன்தான் தாரே. இந்தத் தாரேயின் தண்டிலிருந்து தான் "விசுவாசத்தின் தந்தை" என அழைக்கப்பட்ட ஆபிரகாம் தோன்றினார்.

ஆபிரகாம் சாராள் என்ற பெண்ணை மணந்தார். அவளோ பிள்ளைப் பேறற்றவள். தனக் கொரு வாரிசு வேண்டும் என் பதற்காகத் தனது எகிப்திய அடிமைப் பெண்ணான ஆகார் என்பவளுடன் தன் கணவனை உறவு கொள்ள வைத்தாள். அடிமை ஆகார் கருவுற்ற போதே அக்குடும்பத்தில் கலக்கமும் கலவரமும் வெடிக்கத் தொடங்கியது. ஆகார் இஸ்மாயில் என்ற மகனைப் பெற்றாள். மலடியான சாறாளும் கடவுள் கிருபையால் தள்ளாத வயதிலும், ஈசாக் என்ற மகனைப் பெற்றாள். இந்த இரு பிள்ளைகளும் இரண்டு பெருங் குலங்களின் வரலாற்றின் தொடக்கப் புள்ளியானார்கள்.

சாராள் ஆகார் என்ற இணக்கமற்ற இரு துருவங்களுக்கிடையில் பாய்ந்த கால நதியில், வரலாற்றுப்படகை, இறைவன் என்ற படகோட்டி, ஆபிரகாம் என்ற துடுப்பால் ஓட்டினார்.

# காட்சி ஒன்று



ஊர் என்னும் இடத்தில் தனது தகப்பனாகிய தாரேயின் கூடாரத்துக்கு வெளியே ஒரு வெண்ணிலவு வேளை ஆபிரகாம் தனிமையில் நிலவைப் பார்த்தபடி இருக்கிறான். அப்போது ஆபிரகாமின் நண்பன் அவன் பின்புறமாக அங்கே வந்து சேருகின்றான்.

**நண்பன் :** ஆபிரகாம்! என்ன? தனிமையில் இனிமை காண்கின்றாயா? திருமணமாகாத காளை ஒருவன் இரவுவேளையில் நிர்மலமான வானத்தில் தாரைகைகள் கண் சிமிட்ட பால்பொழியும் வெண்ணிலவில் குளித்தபடி தென்றல் தழுவத் தனித்திருப்பது எந்தக் கோட்டையைப் பிடிப்பதற்கோ?

**ஆபிரகாம் :** நண்பனே! எழில் கொஞ்சி விளையாடும் ஊர் என்னும் இந்த இடத்தில் பால் பொழியும் புதுநிலவைப் பார்க்கும் போதெல்லாம் ஓர் இனம் புரியாத அச்சம் என்னை உரசிச் செல்கிறதே !

**நண்பன் :** ஏன் அப்படிச் சொல்கிறாய்? இறைவன் படைத்த இயற்கையின் வனப்பில் இதையத்தை முழுகவிட்டு இன்பமடைவதில் என்ன தவறு? இறைவன் இயற்கையைப் படைத்தது நாம் இயற்கையோடு இயைந்து, ஆண்டு அனுபவித்து, இன்புற்று வாழ வேண்டும் என்பதற்காகத் தானே?

**ஆபிரகாம் :** அதை நான் மறுக்கவில்லை. . . ஆனால் எனது கவலை எல்லாம் . . .

**நண்பன் :** விளங்கிவிட்டது ஹ. . . (சிரிப்பு) வெண்ணிலவே! நீ இணைந்த காதலர்களுக்கு இன்ப மூட்டுகிறாய்! பிரிந்த காதலர்களை வருத்துகிறாய்! நண்பனே ஆபிரகாம்! நீ எந்தக் கட்சி.

**ஆபிரகாம் :** நீ சொல்வதையும் நான் மறுப்பதற்கில்லை.

**நண்பன் :** ஆனால் மறைக்கிறாய் . . .

ஆபிரகாம் : இல்லை. மனம் விட்டுப் பேசவே விரும்புகிறேன்.

நண்பன் : பேசு.

ஆபிரகாம் : இந்த ஊர் என்னும் இடம் எமக்கு அன்னியமானது. இந்த ஊரின் மக்களும் எமது கொள்கைக்கும் அன்னியமானவர்கள்.

நண்பன் : நீ. . . சொல்வது. . . ?

ஆபிரகாம் : உனக்குப் புரியவில்லை? கேள்; இந்த ஊர் மக்கள் விக்கிரக வழிபாட்டுக்காரர்கள். இயற்கையையும் செயற்கைக் கடவுளையும் வணங்குபவர்கள். நாமோ அருவமும் உருவமும் இல்லாத ஒப்பற்ற இறைவனை வழிபடுபவர்கள்.

நண்பன் : அதற்கு என்ன? அதற்கேதும் ஊறு நேர்ந்து விடவில்லையே? நீ பால் நிலவைப் பார்த்து பயப்படவேண்டிய அவசியமில்லையே !

ஆபிரகாம் : அவசியம் ஏற்பட்டு விட்டது, மண்ணையும் விண்ணையும் மற்றக் கோள்களையும், கண் சிமிட்டும் நட்சத்திரங்களையும் படைத்தவர் இறைவன். ஊர்வன, பறப்பன, நடப்பன, மரம், செடி, கொடிகள், புல் பூண்டுகள் அனைத்தையும் அவரே படைத்தவர்.

நண்பன் : அதில் என்ன சந்தேகம்? . . . எமது இனத்தின் நெறிதவறாத கொள்கை இது. ஆனால் நீ நிலவைப் பார்த்து அஞ்சுவதில் அர்த்தமில்லையே,

ஆபிரகாம் : தேசம் விட்டு தேசம் சென்று நாடோடிகளாக வாழும் நாம் இந்த ஊரில் கூடாரமிட்டிருக்கின்றோம். எங்களது பரிவாரங்களும் எங்களோடு இருக்கின்றார்கள். நம்மவர்களும் இந்த ஊரின் மக்களைப்போல் கடவுளால் படைக்கப்பட்ட பொருட்களை கடவுள் என்று வணங்கிவிடுவார்களோ என்ற அச்சம் என்னை வாட்டுகிறது.

நண்பன் : அப்படியா? அதுசரி: நீ எதற்காக நிலவைக் கண்டு அஞ்சவேண்டும்?

ஆபிரகாம் : அதோ! (ஆபிராம் சுட்டிக்காட்டி) ஒரு கோவில் தெரிகிறதே! அது என்ன கோவில் தெரியுமா?

நண்பன் : தெரியவில்லையே?

ஆபிரகாம் : பால் என்று அழைக்கப்படும் சந்திரன் தெய்வத்தின் கோவில். இந்த ஊர் மக்கள் அந்தப் பால் தேவதையாகிய சந்திரனையே வணங்குகிறார்கள் நாம் இந்த ஊரில் நீடித்திருந்தால் எமது மக்களும் அந்தப் பால் தெய்வத்தை வணங்கக் கூடும் என்ற அச்சம் என்னை ஆட்டிப் படைக்கிறது.

நண்பன் : அப்படி நீ அஞ்சும் அளவுக்கு எமது மக்கள் கவனம் அற்றவர்களா?

ஆபிரகாம் : சூழல் மனிதனை மாற்றக் கூடியது. பெரும்பான்மை சிறுபான்மையின் விழுமியங்களைக் கூட அடித்துச் சென்றுவிடும். அதனால் தான் அஞ்சுகிறேன்.

நண்பன் : நீ சொல்வதில் அர்த்தம் இருக்கிறது. இது சிந்திக்கவேண்டிய விடயந்தான்.

ஆபிரகாம் : எமது தந்தையாகிய தாரேயின் கூடாரத்தில் ஒரு கட்டழகி இருக்கிறாளே!

நண்பன் : யாரைச் சொல்கிறாய்? பேரழகி சாறாயியையா?

ஆபிரகாம் : அவள்தான். அவள் மனதில் கூட பால் தெய்வத்தைப் பற்றிய ஒருவித சலனம் இருக்கிறது. நான் அவளை என் உயிரிலும் மேலாக நேசிக்கிறேன். என் அன்பையும் அவளிடம் தெரிவித்தேன்.

நண்பன் : அதற்கு அவள் என்ன சொன்னாள்?

**ஆபிரகாம் :** அவகாசம் கேட்டிருக்கிறாள். நான் பால் தெய்வத்தை நம்புவதில்லை. அவளுக்கும் அது தெரியும். பால் தெய்வத்தில் அவளுக்கு உள்ளூரச் சிறு நம்பிக்கை இருக்கிறது.

**நண்பன் :** அப்படியா சங்கதி?

**ஆபிரகாம் :** எனது உண்மைத் தெய்வத்தை நான் விட்டு விடப்போவதில்லை என்பதும் அவளுக்குத் தெரியும். சாராயி இப்போது இங்கு வருவாள். தன் எண்ணத்தைச் சொல்வாள். நான் அவளுக்காகவே காத்திருக்கிறேன்.

**நண்பன் :** கவலையை விடு. எங்கள் தேவன் உங்கள் இருவரையும் இணைத்துவைப்பார்.

**ஆபிரகாம் :** நண்பனே! இந்த நிலவும், சாறாயின் முகமும் என் இதயத்தைச் சுடுகின்றன.

**நண்பன் :** நண்பனே! அதோ! யாரோ வருகிறார்கள். அது சாறாயியாக இருக்கலாம். நான் சென்று வருகிறேன்.

(நண்பன் போகிறான்)
சாறாயி வருதல்

**ஆபிரகாம் :** சாறாயி !

**சாறாள் :** அன்பரே!

**ஆபிரகாம் :** (பெருமூச்சுவிட்டு) சாறாயி! என்ன முடிவோடு வந்திருக்கிறாய்?

**சாறாள் :** அந்த நிலவும் நீலவானமும் போல நாம் இருவரும்....

**ஆபிரகாம் :** சாறாயி! என் இதய வானில் உதித்த வெண்நிலவே! எனது கடவுளிடம் விட்டுக் கொடுக்காத விசுவாசம் உடையவன் நான் என்பது நீ அறிந்தது தானே!

**சாறாள் :** அறியாமலா தங்களை நாடி ஓடி வந்தேன்? ஆனால் ஒன்று. . .

**ஆபிரகாம் :** என்ன சாறாயி?

**சாறாள் :** இந்த ஊர்மக்கள் பால் தெய்வத்தின்மேல் அசைக்கமுடியாத பற்றுடையவர்கள். ஆனால் நீங்கள் அவர்களுடைய தெய்வத்தை இகழ்வதாக, அவர்கள் உங்கள்மேல் கருத்தாய் இருக்கிறார்கள். அதனால் இந்த ஊரிலிருந்து விரைவில்நாம் போய்விட வேண்டும்.

**ஆபிரகாம் :** நன்றி. நல்ல வார்த்தை சொன்னாய். நான் எனது மக்களைப் பொய்யான கடவுளின் வழிபாட்டிலிருந்து காப்பாற்ற வேண்டும். அதற்கான சூழலை எதிர்பார்க்கிறேன்.

**சாறாள் :** கவலைப்படாதீர்கள். சிறுதுளியாய் எனது நெஞ்சில் துளிர்த்திருந்த பால் தெய்வம் பற்றிய நம்பிக்கை உங்கள் உண்மைத் தேவன் நினைவால் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது.

**ஆபிரகாம் :** (சாறாயின் கைகளைப் பற்றி)
சாறாயி! நான் என் தேவனுக்கு நன்றி சொல்கிறேன். நாங்கள் என்றும் பிரியாதிருப்போம்.

திரை

# காட்சி இரண்டு



## ஆபிரகாம் - சாறாள்

**ஆபிரகாம் :** சாறாயி! நாம் நமது கடவுளின் கட்டளைக்குக் கட்டுப்பட்டு ஊர் என்னும் இடத்தைவிட்டுக் கானான் நாட்டிற்கு வந்துவிட்டோம். இப்போது கானான் நாடு பஞ்சத்தால் பரிதவிக்கிறது. ஒருவேளை உணவுக்கே தட்டுப்பாடு. நாம் இங்கு இனி இருக்க முடியாது.

**சாறாள் :** அதற்கு இப்போது என்ன செய்வது? எங்கு போவது? எதுவுமே புரியவில்லை. . .

**ஆபிரகாம் :** எனக்கு எகிப்துக்குப் போகலாம் என்று தோன்றுகிறது.

**சாறாள் :** பிரச்சனை இல்லை என்றால் எங்கு வாழ்ந்தால்தான் என்ன?

**ஆபிரகாம் :** சாறாயி! ஒருவனுக்குக் கடவுள் கொடுத்த நன்கொடைகளில், நல்ல மனைவியும் ஒன்று. அதற்காக நான் இறைவனுக்கு நன்றி சொல்கிறேன். ஆனால். . .

**சாறாள் :** என்ன ஆனால் . . ? நான் ஏதும் தவறுதலாக. .

**ஆபிரகாம் :** (சிரித்தல்) ம் ... ம் ... ம் உன்னை எனக்குத் தெரியாதா என்ன? ஆனால் எகிப்தில் ஏதும் விபரீதம் ஏற்பட்டு விடுமோ என்ற ஏக்கம்!

**சாறாள்:** என்ன விபரீதம்? ஆண்டவர் நம்மோடு இருக்க நாம் ஏன் கவலைப்பட வேண்டும்?

**ஆபிரகாம் :** எனது கவலை எல்லாம் உன்னைப் பற்றித்தான்.

**சாறாள் :** (ஆச்சரியம்-அச்சம்) என்ன? என்னைப் பற்றியா? எகிப்தில் எனக்கு அப்படி என்ன ஏற்பட்டுவிடும்?

**ஆபிரகாம் :** சாறாயி! என்னை மன்னித்துக்கொள். உன்பேரழகே என்னை அச்சுறுத்துகிறது.

**சாறாள் :** என் பேரழகு உங்களுக்குப் பெருமை தானே? அதற்கு ஏன் அஞ்சுகிறீர்கள்?

**ஆபிரகாம் :** சாறாயி! உன் பேரழகு என்னுயிரைப் பறித்துவிடுமோ என்ற அச்சம். . . !

**சாறாள் :** என்ன என் பேரழகு உங்கள் உயிரைப் பறித்து விடுமோ?

**ஆபிரகாம் :** சாறாயி! உன் பேரழகின் பொருட்டு எகிப்தியர் என்னைக் கொன்று விட்டு உன்னை வைத்திருப்பர் என்று கலங்குகிறேன்.

**சாறாள் :** (சோகத்தோடு) அப்படியானால் நாம் எகிப்துக்குப் போகவே கூடாது. அதை நினைக்க என் நெஞ்சு துடிக்கிறது. என் ஆன்மா பதறுகிறது. தாகத்தால் நாவரண்டு ஒட்டிக் கொண்டாலும், பசியால் வயிறு ஒட்டிச் செத்தாலும் எகிப்துக்குப் போகாமல் வேறு எங்காவது போய்விடுவோம்.

**ஆபிரகாம் :** சாறாயி! நான் சொல்வதற்கு நீ செவிசாய்ப்பாயா?

**சாறாள் :** என்ன சொல்லப் போகிறீர்கள்?

**ஆபிரகாம் :** சாறாயி! உன் பொருட்டு எனக்கும் என் பொருட்டு உனக்கும், நன்மையுண்டாகவும், இருவர் உயிர்பிழைக்கவும் நான் சொல்வதின் படி நீ செய்ய வேண்டும்.

**சாறாள் :** உங்களுக்கு நன்மை என்றால் எனக்கும் அது நன்மைதானே? சொல்லுங்கள் செய்கிறேன்.

**ஆபிரகாம் :** நாம் எகிப்துக்குப் போனதும் அங்கு நீ என்னை உன் சகோதரன் என்று சொல்ல வேண்டும்.

சாறாள் : (கவலையோடு) இது நடக்கக்கூடிய கருமமா? கணவன் அருகிருக்கும் போதே மனைவி தன் கணவனைச் சகோதரன் என்று சொல்ல நா எழுமா? இதயம் ஒப்புக்கொள்ளுமா?

ஆபிரகாம் : நடிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. ஒரு விதத்தில் நீ எனக்குச் சகோதரி தானே!

சாறாள் : அது எப்படி?

ஆபிரகாம் : நாம் இருவரும் கூடி மகிழ்வது பிள்ளைப் பேறுக்காகவன்றி உடல் இன்பத்தை அனுபவிக்க அல்ல என்பது எமது கடவுள் வகுத்த கொள்கை. அப்படிப்பார்த்தால் நாம் இருவரும் சகோதரர்கள் தானே.


சாறாள் : (பெருமூச்சுவிட்டு) ஏதோ இருவரின் நன்மைக்காகவும் செய்கிறேன். இனி ஆண்டவர் விட்டவழிதான். (கவலையோடு) அழகு. . . ஆபத்தின் மறு வடிவமா?

ஆபிரகாம் : சாறாயி! மனிதன் எப்பொழுதும் தூண்டப்படுகிறான். அவனுக்குப் புறத்தே சுதந்திரமாக இயங்கும் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் அதன் அசைவும் அவனைத் தூண்டுகிறது. அப்படித்தான் அழகும் மனிதனைத் தூண்டுகிறது. அழகு காட்டும் அலை கடலும், புன்னகைக்கும் அந்திவானமும் மனிதனைத் தூண்டி மகிழச் செய்கிறது. அவை மனிதனை மயக்குவதில்லை. ஆனால் பெண்ணின் பேரழகு மனிதனை போதை ஏறச் செய்து மயக்குகிறது. பெண்ணின் பேரழகின் தூண்டலால் அறிவிழந்து போகிறார்கள். கடவுள் பயம் இல்லாதவனும், நீதிக்குப் பயப்படாதவனும் அழகின் தூண்டலால் தீமை செய்கிறான். எதற்கும் இறைவனை நம்புவோம்.

சாறாள் : நம்பிக்கை வீண்போகாது, வாருங்கள் புறப்படுவோம்.

திரை

# காட்சி மூன்று



கூடாரத்தில் சாறாள்
அவளது அடியவள் ஆகார்.
ஆபிரகாம்

**சாறாள் :** ஆகார்! இங்கேவா!, அதோ! அங்கே இருக்கும் மண்பாத்திரத்தை எடுத்துவா.

**ஆகார் :** என் தலைவியாகிய சாறாயி! நான் இப்போது உனது அடிமையல்ல. நீ சொல்வதை நான் கேட்கமாட்டேன்.

**சாறாள் :** (ஆச்சரியத்தோடும் அதிர்ச்சியோடும்) ஆகார்! நீ என்ன சொல்கிறாய்?

**ஆகார் :** சாறாயி! இப்போது நான் உனது அடிமை அல்ல. உன் வாரிசின் தொட்டில். இந்தத் தொட்டிலை நீ தாலாட்டு. இனி உனது கட்டளைகள் என்னிடம் செல்லாது.

**சாறாள் :** நன்றி கெட்ட அடிமையே! அர்ப்பனுக்குப் பவுசுவந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பவனுக்கு நீ ஒப்பானவள். நீ எனது அடிமை என்பதைப் பாராமல் எனது கணவனை உன்னுடன் உறவு கொள்ளும்படி வைத்தேன். நன்றி கெட்டவளே! பேசுவதை அளந்துபேசு.

**ஆகார் :** யாரடி நன்றி கெட்டவள்? நான் ஒன்றும் சும்மாயிருந்து வயிறு வளர்க்க வில்லை. உழைக்கிறேன். சாப்பாடுகிறேன். உன் சுயநலத்துக்காக, உனது சொத்துக்கு வாரிசுக்காகத்தான், உனது கணவனை என்னுடன் உறவு கொள்ளவைத்தாய். இப்போது எசமான் எனது கைக்குள். அவர், எனது எசமான், என்னிடம் வைத்திருக்கும் அன்பை நீ அறிவாயா?

**சாறாள் :** பொதிசுமக்கும் அடிமை ஒட்டகமே! யாரோடு யாரைப்பற்றிப் பேசுகிறாய்? இப்போதே உன்னைத் துரத்திவிடுகிறேன். வரட்டும் அவர். அடிமை யார் என்பதை எண்பித்துவிடுகிறேன்.

ஆகார் : அப்படியா? அதையும் பார்ப்போம். மீண்டும் சொல்கிறேன். நான் உன் எதிர்காலச் சந்ததியின் தொட்டில். நீ என்னைத் தாலாட்டு. அல்லது உனக்கு நான் வால் காட்டுவேன்.

சாறாள் : வரட்டும் வரட்டும். தாலாட்டுகிறேனா? வால் வெட்டுகிறேனா என்பதைக் காட்டுகிறேன்.

ஆகார் : அது நடக்காது. என் எசமான், என் பிள்ளைக்குத் தகப்பன், உனது கணவன் என்ன சொல்கிறார் தெரியுமா?

சாறாள் : என்னடி சொன்னார்? சொல்லடி பார்க்கலாம்.

ஆகார் : என் அன்பே ஆகார்! செழுமைமிக்க நிலமே! ஒரு வரலாற்றின் புதிய அத்தியாயமே! என்று பாராட்டினார். என்னை அன்போடு அணைத்து ஏதேதோ புகழ்ந்தார்.

சாறாள் : ஏன் புழுகுகிறாய்? புத்தி பேதலித்தவளே! பாம்பின் கால் பாம்பறியும். பன்றி நீ அறிவாயோ?

ஆகார் : அறிவேன். பொறாமையால் புழுங்கிப் போனவளே! வானங்கறுத்து மின்னி இடிமுழுங்கி யுகமழையில் தோய்ந்தாலும், ஒரு கோரைப் புல்லைத்தானும் துளிர்க்க முடியாத மலட்டு நிலம் நீ என்பதை அறிவேன்.

சாறாள் : (மிகுந்த கோபத் தோடும் அழுகையோடும்) அடக்கடி அடிமையே! உன்னை அடித்து முறித்து விடுவேன்.

என்று சாறாள் அடிப்பதற்குக்கையை உயர்த்துகிறாள். ஆகார் பயந்தவளாய்

ஆகார் : ஐயோ! ஆண்டவரே! வாயும் வயிறுமாய் இருக்கின்ற எனக்குப் பொல்லாத சாறாயி செய்யும் பொல்லாங் கைப்பாரும்.

அடிக்க ஓங்கிய சாறாள் ஏதோ யோசித்தவளாய் பலமாகக் கத்துகிறாள்.

**சாறாள் :** போ. . . போடி. . . கண் முன் நில்லாதே. உன்னைக் கொன்று விடுவேன்.

ஆகார் பயந்தவளாய்க் கூடாரத்துள் செல்ல, ஆபிரகாம் மேடைக்கு வருகிறார். சாறாள் அழுதபடி.

வாருங்கள். . .வாருங்கள். . .என் கண்ணீரைப் பாருங்கள். இதுவரை காலமும், உங்கள் எண்ணப்படி உங்களுக்காகவே வாழ்ந்தேன். அதற்கு நீங்கள் செய்த கைமாறு இதுதானா? நீங்கள் எனக்குத் துரோகம் செய்து விட்டீர்கள்.

**ஆபிரகாம் :** (குழப்பத்தோடு) இது என்ன சாறாயி? வந்ததும் வராததுமாய்ப் பொரிந்து தள்ளுகிறாயே. என்ன நடந்தது?

**சாறாள் :** எதைச் சொல்வேன்? எப்படிச் சொல்வேன்? இப்பொழுது ஆகார் மட்டுமீறிப் போகிறாள். என் சொல்லுக்குச் செவிசாய்ப்பதில்லை. மலடி என்று அவமதித்துப் பேசுகிறாள். கிண்டலும் கேலியும் செய்கிறாள். நீங்கள் அவளுக்குக் காட்டும் செல்லந்தான் இதற்குக் காரணம்.

**ஆபிரகாம் :** சாறாயி! ஏன் என்மேல் அபாண்டத்தைச் சுமத்துகிறாய்? சும்மாயிருந்த சங்கை நீதான் ஊதிக்கெடுத்தாய். உனது விருப்பத்தின் பேரிலேயே நான் ஆகாரோடு உறவு கொண்டேன். இப்போது முத்துத்தேவையா, சிப்பி தேவையா, என்றா கேட்கிறாய்? இப்போதைக்கு இரண்டும் தான் தேவை. கொஞ்ச நாட்களுக்குப் பொறுமையாக இரு. பொறுத்தார் அரசாள்வர். பொங்கினார் காடுறைவர்.

**சாறாள் :** (அழுதபடி) நான் அவளை எவ்வளவு அன்பு செய்தேன். அவளோ எனக்கு அடிக்காத குறை ஒன்றுதான். சொல்லால் சுட்டுவதைத்தாள். எனக்கு இறைவனின் அருள் இல்லை என்றாள். (அழுதுகொண்டு) நான் சபிக்கப்பட்டவள். என் கடவுளும் என்னைக் கைவிட்டு விட்டார். எனக்கு நிம்மதி மரணத்தில்தான்....

**ஆபிரகாம் :** சாறாயி! அமைதி கொள். எப்படித்தான் குளித்தாலும் காகம் கொக்காகாது. பிள்ளைப்பேறுடையாள் என்பதால் ஆகார் என் நெஞ்சில் குடியிருக்க முடியுமா? நீதான் ஆகாருக்குத்தலைவி. அன்பு காட்டிப் பணியாதவளை அடக்கு முறையால் பணியவை. ஆகார் உன் அடிமை. அவளை நீ கண்டித்து நடத்து.

**சாறாள் :** வெப்பத்தால் சூடேறிய பாத்திரம்போல் வேகிக் கொண்டிருந்த என் நெஞ்சத்துக்கு உங்கள் வார்த்தைகள் குளிர் தென்றலாக இருக்கிறது. பார்க்கிறேன். சேற்றை மிதிப்பது போல் ஆகாரை மிதித்து கசக்குகிறேன்.

திரை

# காட்சி நான்கு



ஜெரரா நாட்டு அரண்மனை. சேவகன், அரசன், மந்திரி, ஆபிரகாம், சாறாள்.

**அரசன் :** பிரபுக்களே! பிரதானிகளே! கேளுங்கள். "பிறன் மனைவியை அபகரித்த கயவனே! அந்தக் கயமைத்தனத்துக்காக நீ சாகப் போகிறாய். நீ அபகரித்திருக்கும் பெண் ஆபிராமின் மனைவி சாறாயி என்று நீ அறியவில்லையா? அவளுடைய கணவன் உயிருடன் இருக்கிறான்" என்று ஆண்டவர் இரவு கனவில் என்னை எச்சரித்தார்.

**மந்திரி :** ஏன்? அந்த அழகுத் தேவதைக்குக் கணவன் இல்லையே! ஆபிராம் அவளின் சகோதரன் அல்லவா? அவளை அபகரிப்பது எப்படிக் குற்றமாகும்?

**அரசன் :** அமைச்சரே! நீர் சொன்னது சரியே! கனவில் தோன்றி என்னை எச்சரித்த ஆண்டவருக்கு நான் என் வழக்கை உரைத்தேன்.

**மந்திரி :** எப்படி?

**அரசன் :** ஆண்டவரே! வெள்ளை மனமும், பிள்ளைக் குணமும் கொண்ட மக்களை நீர் சாகடிப்பீரோ? அவள் தன் கணவன் ஆபிராமைத் தன் சகோதரன் என்றும், அவன் அவளைத் தன் சகோதரி என்றும் சொல்லவில்லையா? நான் கபடில்லாத மனத்துடனும், தூய்மையான கைகளுடனும் இதைச் செய்தேன் என்று ஆண்டவருக்கு விளக்கிக் கூறினேன்.

**மந்திரி :** அரசே! ஆண்டவர் அதற்கு என்ன சொன்னார்?

**அரசன் :** "உன் கபடமற்ற மனத்தை நாம் அறிவோம். அதனால்தான் நமக்கு விரோதமாய் நீ பாவம் செய்யாதபடியும், நீ அவள்மீது தொடாதபடியும் செய்தோம். உன்னைக் காப்பாற்றினோம். ஆதலால் அந்தப் பெண்ணை அவள் கணவனிடம் அனுப்பிவை. அவள் கணவன் ஓர் இறைவாக்கினன். அவன் உனக்காகப் பிரார்த்தித்தால் நீ பிழைப்பாய். அவளை நீ அவனிடம் அனுப்ப அக்கறை காட்டாவிட்டால் நீயும் உன்னைச் சார்ந்தவர்களும் சாகவே சாவீர்கள்" என்றும் ஆண்டவர் என்னை எச்சரித்தார்.

**மந்திரி :** ஐயோ! அரசே! நாங்கள் பிழைத்தோம்! மயிர் இழையில் உயிர் பிழைத்தோம்!

**அரசன் :** தலை போக வேண்டிய இடத்தில் தலைப்பாகையோடு முடிந்துவிட்டது. யாரங்கே?

**காவலன் :** (வணங்கி) அரசே!

**அரசன் :** ஆபிராம் என்ற மனிதனை அரசவைக்கு அழைத்துவா.

**காவலன் :** ஆகட்டும் அரசே!

ஆபிரகாமைக் காவலன் அழைத்து வர ஆபிரகாம் அரசனை வணங்கி நிற்கிறார்.

**அரசன் :** நீர் என்ன கருமம் செய்யத் துணிந்தீர்? நீர் என் மேலும், என் நாட்டின் மேலும் பெரும்பழி சுமத்துவதற்கு நாங்கள் உமக்கு என்ன குற்றம் செய்தோம்? செய்யத் தகாததை எமக்குச் செய்தீரே! அது எதற்காக? என்பதை விளக்கும்.

**ஆபிரகாம் :** அரசே! இந்த இடத்திலே தெய்வபயம் இருக்கிறதா என்று அறியவும், என்மனைவியின் பேரழகின் பொருட்டு இவ்வூரில் உள்ளவர்கள் என்னைக் கொன்று விடக்கூடும் என்பதாலும், என்மனைவியை அவ்வாறு சொல்லும்படி பணித்தேன். மேலும் அவள் என் தாய்க்கு மகள் அல்ல. என் தந்தையின் மகளே. எனவே ஒரு வகையில் அவள் என் சகோதரியே.

**அரசன் :** ஆபிராமே! நீர் செல்லும் இடமெல்லாம் உம் மனைவிக்கு நீர் சகோதரன் என்று சொல்லி வைப்பது உமக்குக் கைவந்த கலையோ? முன்பும் இப்படி ஏதும் நடந்திருக்கிறதா?

**ஆபிரகாம் :** ஆம் மன்னவா! நாம் எகிப்துக்குச் சென்றபோது எகிப்திய அரண்மனையில் இப்படித்தான் நடந்தது.

**அரசன் :** பிறகு?

**ஆபிரகாம் :** எமது இறைவன் எகிப்திய அரசனையும், அவன் குடும்பத்தையும் துன்பத்தால் வருத்தியதால் அரசன் அச்சமுற்று, என் மனைவியை என்னிடம் பத்திரமாக அனுப்பி வைத்ததோடு, எனது சொத்துக்கள் எல்லாவற்றையும் நான் எடுத்துச் செல்லவும், எங்களுக்குக் குடிமக்கள் தீங்கு செய்யாதபடியும் கட்டளையுமிட்டான்.

**அரசன் :** உம்மனைவி உம்மைச் சகோதரன் என்று சொல்லும்படி நீர் செய்வதால் உமக்கு என்ன இலாபம்?

**ஆபிரகாம் :** அரசே! என் மனைவி பேரழகி. . . அவளை அடைய அந்நியர்கள் என்னைக் கொன்றுவிடக் கூடும். . அதனால் என் மனைவி விதவை ஆவாள். பிறகு அவள் கணவன் இல்லாதவளே. கணவன் இல்லாத

பெண்ணை ஒருவன் கட்டிக் கொள்வது பெரிய பாவம் அன்று. ஆனால் ஒருத்தியின் கணவன் இருக்கும்போதே அவளை இன்னொருவன் அபகரித்தால் அது ஆண்டவருக்கே அடுக்காத பெரும் பாவம். அப்படிப்பட்டவனை ஆண்டவர் தண்டிப்பார். அதனால் தான் அப்படிச் செய்தேன்.

**அரசன் :** உமக்கு அபாரமூளைதான். ஆனால் இத்தகைய கருமத்தை நீர் இனிமேல் செய்யவே கூடாது. இதோ! என் மந்தைகளையும், வேலைக் காரிகளையும் உமக்குத் தருகிறேன். இந்த நாடு உமக்கே சொந்தம். நீர் எந்த இடத்தில் வேண்டுமானாலும் குடியிருக்கலாம். யாரங்கே?

**காவலன் :** (வணங்கி) அரசே!

**அரசன் :** சாறாயியை, இவருடைய மனைவியை, அழைத்துவா.

காவலன் சாறாளை அழைத்து வருகிறான்.

**அரசன் :** இதோ! உன் சகோதரனுக்கு ஆயிரம் பொற்காசு கொடுத்துள்ளேன். அந்தப் பணத்திலே கண்ணைமறைக்கும் ஒரு முட்டாக்கு வாங்கிக் கொள். நீ எங்கே போனாலும், யார் அருகில் இருந்தாலும், உன்முகம் எவருக்கும் தெரியாதபடி மூடிக்கொள். நீ ஒரு முறை சிக்கிக் கொண்டாய் என்பதை நினைவில் வை. . .

(அரசன் ஆபிரகாமைப் பார்த்து)

ஆபிராம்! நீர் எனக்கு ஓர் உதவி செய்யவேண்டும் என்று உம்மைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**ஆபிரகாம் :** அரசே! நான் என்ன செய்ய வேண்டும்?

**அரசன் :** என் மனைவியும், வேலைக்காரிகளும் நோயுற்றிருக் கிறார்கள். அவர்கள் குணமாகி எனக்கு மக்கள் பேறு கிடைக்கும் படி நீர் ஆண்டவரைப் பிரார்த்திக்க வேண்டும். ஏனெனில் உம் மனைவியின் பொருட்டு ஆண்டவர் என் வீட்டிலுள்ள பெண்களின் கருப்பைகளை மலடாக்கி விட்டார்.

**ஆபிரகாம் :** அரசே! அஞ்சவேண்டாம். நான் "உயிருள்ள எமது ஆண்டவரைப்" பிரார்த்திக் கிறேன். அவர் உமக்கு ஆசீர் அருளுவார்.

என்று சொல்லி ஆபிரகாம் கைகளை உயர்த்தி வானத்தைப் பார்த்து வேண்டுகிறார்.

திரை

# காட்சி ஐந்து



*மம்பிறே பள்ளத்தாக்கில் கூடாரம். ஆபிரகாம், சாறாள், வெப்பமானதால் ஆபிரகாம் கூடார வாசலில் இருக்கின்றார். திடீரென்று மூவர்தோன்றுகிறார்கள்.*

*ஆபிராம் ஓடிச் சென்று அவர்களின் கால்களில் விழுந்து.*

**ஆபிரகாம் :** உம் கண்ணில் எனக்கு அருள் கிடைத்ததாயின், நீங்கள் மூவரும் என்வீட்டைக் கடந்து போக வேண்டாம். இதோ! விரைவில் கொஞ்சத் தண்ணீர் கொண்டுவருகிறேன். உங்கள் கால்களைக் கழுவி இந்த மரத்தடியில் கொஞ்சம் இளைப்பாறுங்கள். நீங்கள் என் விருந்தினர்கள். உங்களுக்கு நான் விருந்தோம்ப வேண்டும்.

**ஒருவர் :** (மூவரில் ஒருவர் பேசுதல்) நீ சொன்னபடியே ஆகட்டும். நாம் அதுவரை இந்த மரத்தடியில் காத்திருப்போம்.

*ஆபிரகாம் கூடாரத்துள் நுழைந்து தண்ணீரும் கொஞ்ச அப்பமும் கொண்டு வருதல்.*

**ஆபிரகாம் :** இதோ! தண்ணீரும், சில அப்பங்களும். தற்போதைக்கு உண்டு இளைப்பாறுங்கள். நான் விரைவில் வருகிறேன்.

*(ஆபிரகாம் கூடாரத்துள் சென்றபின்)*

**ஒருவர் :** பார்த்தீர்களா? ஆபிராமுக்கு எவ்வளவு அன்பு உள்ளம்! விருந்தோம்பும் பண்பாளன்.

**மற்றவர் :** புன்னகையோடு, முகமலர்ச்சியோடு வரவேற்கின் றான்.

**அடுத்தவர் :** நயம்படப் பேசுகிறான். நல்ல மனமுடையான்.

**ஒருவர் :** இந்த நல்ல மனிதனுக்கு ஒரு பெருங்குறை. பிள்ளைப் பேறு இல்லை.

**மற்றவர் :** இது ஆபிராமின் குறை அல்ல. அவன் மனைவி சாறாயின் குறை.

ஆபிரகாம் உணவைக் கொண்டு வந்து மூவருக்கும் அருகே வைத்து விட்டு ஒதுங்கி நிற்கிறார். சாப்பிடும் காட்சியை சைகையில் காட்டலாம்.

**ஒருவர் :** ஆபிராம்! உன்மனைவி சாறாயி எங்கே?

**ஆபிரகாம் :** இதோ கூடாரத்துக்குள் இருக்கிறாள்.

**மற்றவர் :** ஆபிரகாம்! நாங்கள் மீண்டும் இதே காலத்தில் உன்னிடத்தில் திரும்பி வருவோம். அப்பொழுது நீரும் உன் மனைவி சாறாயியும் உயிரோடு இருப்பீர்கள். சாறாயிக்கு ஒரு மகனும் இருப்பான்.

**அடுத்தவர் :** ஆபிராம்! கூடாரத்துள் இருக்கும் உன் மனைவி ஏன் சிரிக்கிறாள்?

**ஆபிரகாம் :** நான் அறியேன் ஆண்டவரின் தூதரே.

**ஒருவர் :** நான் கிழவியாக இருக்கையில் பிள்ளைப் பெறுதல் மெய்யாகுமோ என்று ஏளனமாகச் சிரிக்கிறாள். கடவுளால் ஆகாத கருமம் ஏதும் உண்டோ? நாங்கள் மீண்டும் வருவோம்.

அவர்கள் புறப்படும்போது ஆபிரகாம் கூடவே அவர்களுடன் மேடைக்கு வெளியே போய் மீண்டும் மேடைக்குவர, சாறாளும் சிரித்துக் கொண்டு கூடாரத்துளிருந்து வெளியே வருகிறாள்.

**சாறாள் :** நான் ஒரு கிழவி. என் கணவனும் ஒரு கிழவன். நான் இனி இன்பத்துக்கு இடங் கொடுக்கலாமா? காய்ந்துபோன எனது கருப்பையில் கருத்தோன்றுமா? யார் இவர்கள்?. . . .ஆண்டவரின் தூதர்களா?

அப்பொழுது ஆபிரகாம் வந்து கொண்டே

**ஆபிரகாம் :** என்ன சாராயி? நீ ஏன் சிரிக்கிறாய்? நீ கூடாரத்துள் இருந்து கொண்டு சிரித்ததை விருந்தினர் என்னிடம் சொன்னார்கள்.

**சாறாள் :** (ஆச்சரியம்) அப்படியா? அவர்களுக்கு நான் சிரித்தது எப்படித் தெரியும்?

**ஆபிரகாம் :** அவர்கள் கடவுளின் தூதர்கள்போல் இருக்கிறார்கள்.

*சாறாள் ஆனந்தக் கண்ணீர் சொட்ட*

**சாறாள் :** அப்படியா? ஹ...........(சிரிப்பு) யுகமழை பொழிந்தாலும் ஒரு கோரைப் புல்லைக் கூடத் துளிர்க்க முடியாத இந்த மலட்டு நிலத்தில், ஒரு றோஜாப்பூ கண் சிமிட்டப் போகிறதா?
ஹ...........ஹ.............. (சிரிப்பு)

*ஆபிரகாம் ஆச்சரியத்தோடு சாறாளையே பார்த்துக் கொண்டு நிற்கிறார்.*

**ஆபிரகாம் :** சாறாள்!

**சாறாள் :** ஹ........ஹ (சிரிப்பு) பட்டுவரண்டு போன மரத்தின் காம்புகளிலிருந்து, அமுதப்பால் சுரக்கப் போகிறதா? மலடி மலடி என்று மற்றவர்களிடம் மதிப்பிழந்து, மகிழ்ச்சியிழந்து கிடந்த எனக்கும் ஒரு தாய்மை மகுடம். இது இறைவனின் திருவுளம் என்றால். . . ஆகார்! நீ என்னிடம் தோற்று விடுவாய். என் சந்ததியின் தொட்டிலை இனி நானே ஆட்டுவேன். . . ஆனந்தக் கூத்தாடுவேன். ஆண்டவர் திருப்பெயர் போற்றப்படுவதாக.

*சாறாள் பிரார்த்தித்த நிலையில் அசையாது நிற்க, ஆனந்தக் கண்ணீருடன் கைகளை உயர்த்திக் கடவுளை வேண்டுகிறார்.*

ஆபிரகாம் : சாறாள்! சாறாள்!! சாறாள்!

*திரை*

# காட்சி ஆறு



ஆபிரகாம் சாறாள். ஆகார், ஆகாரின் மகன் இஸ்மாயில் மேடையில் நிற்கிறார்கள். சாறாள் தன் மகன் பால் குடிமறந்த நாளைக் கொண்டாடுகிறாள். இறைவனுக்கு நன்றிப் பிரார்த்தனை செய்கிறாள்.

**சாறாள் :** கடவுளே! உமது கருணை, வரண்ட என் வயிற்றில் முத்துப்போல் புத்திரனைப் பிறப்பெடுக்கச் செய்தது. ஏளனத்துக்குரியவளாய் எண்ணப்பட்ட இந்த அபலைக்கு ஆறுதல் அளித்தவரே! அற்புதசீலா! அண்டிவரும் அடியவர்க்கு அருள்பாலிக்கும் ஐயனே! உமக்கு என் இதயம் நிறைந்த நன்றி.

சாறாள் கையிலுள்ள பிள்ளையை அரவணைத்து தாலாட்டுப் பாடுகிறாள். இதைப் பார்த்த ஆகார் தன் மகனை அணைத்தபடி சாறாளைப் பார்த்துப் பொருமுகிறாள்.

**சாறாள் :**
கண்ணுறங்கு கண்ணுறங்கு
கண்மணியே கண்ணுறங்கு
தித்திக்கும் தேனமுதே கண்ணுறங்கு
செம்பவள வாய்திறந்து கண்ணுறங்கு

மாலை மதிபோல முகம் படைத்தவனே
காலை இளம் பருதிபோலச் சிரிப்பவனே
சோலைக்குயில் இசைதனையே வென்றவனே
கோலக் குறு நடையினிலே வருபவனே.

பூவிதழின் புன்னகையில் புது எழிலோ?
கருவிழிகள் பொழிவதேன்ன அருளமுதோ?
மனக் கவலை மனதை விட்டு மறைகிறதே
மகிழ்ச்சி எந்தன் இதயத்தில் பொழிகிறதே.

பலகோடி பணம் வந்து சேர்ந்தாலும்
பலர் போற்ற புவி மீது வாழ்ந்தாலும்
கலைச் செல்வம் உனக்கு ஈடு இவையாகுமோ?
குலச் செல்வம் உனைப் போல பெறலாகுமோ?

பாட்டு முடிந்ததும் ஆபிரகாம் பேசுகிறார்.

**ஆபிரகாம் :** சாறாள்! பண் நிறைந்த பாடலும், கண்ணிறைந்த காட்சியும் போல வாழ்க்கை எவ்வளவு அர்த்தமுள்ளதாக இருக்கிறது. . ?
(ஆகாரைப் பார்த்து) இல்லையா ஆகார்?

**ஆகார் :** ஏன் சொல்ல மாட்டீர்கள்? என் தலைவரே! இப்படிப்பட்ட வார்த்தைகளை என் மகனுக்குச் சொல்லியிருக்கிறீர்களா?

**ஆபிரகாம் :** இந்த மங்களமான வேளையில் இப்படி அமங்கல மாகப் பேசுகிறாயே. கொஞ்சம் நிதானமாக இரு ஆகார். என் மகன் இஸ்மாயிலிடம் என் இதயம் இருக்கிறது.

**சாறாள் :** இவள் எப்படி இருப்பாள்? பொறாமைக்காரி. என் கண்ணின் கருமணியை நான் தாலாட்டியபோது இவள் மனம் பொரிந்ததைப் பார்த்தேன்.

**ஆகார் :** யாரைப் பொறாமைக்காரி என்கிறாய்? நான் வாயும் வயிறுமாய் இருந்தபோது என்னை வதைத்தவள் நீ. நான் உன்னை விட்டு ஓடினேன். ஆனால் ஆண்டவர் தூதன் என்னை வழி மறித்து உன்னிடம் போகும் படி பணித்தார். அதனால் தான் கொடியவளான உன்னிடம் திரும்பி வந்தேன்.

**சாறாள் :** நீ என்னை மலடி என்று அவமானப்படுத்தினாய். என் கணவனை உன்னுடன் உறவு கொள்ள வைத்தது பொறாமையினாலா? சொல்லடி. உனது நன்றிகெட்ட தனந்தான் உன்னைத் துரத்தியது. நான் அல்ல.

**ஆபிரகாம் :** ஏன் கதை? முந்திவந்த செவியைப் பிந்தி வந்த கொம்பு மறைத்த மாதிரித்தான். எனது பிள்ளை முந்தி வந்த முத்து. நானும் கடவுளின் அருள் பெற்றவன் தான். ஆண்டவர் என்னோடும் பேசியுள்ளார். நீங்கள் எனக்கும் சொந்தம். உங்கள் சொத்தில் என் பிள்ளைக்கும் சமபங்கு இருக்கிறது.

**சாறாள் :** இது நடக்கவே நடக்காது. நடக்கவும் விடமாட்டேன். ஓர் அடிமையின் மகன் என் மகன் ஈசாக்கோடு பங்காளியாக விட மாட்டேன்.

**ஆகார் :** என் உயிர்போனாலும் போகும். என் மகனுக்குரிய சொத்தைப் பெறாமல் விடமாட்டேன். இதில் நான் விட்டுக் கொடுக்கப் போவதில்லை.

என்று சொல்லி ஆகார் தன் மகனுடன் கூடாரத்துள் நுழைகிறாள்.

**ஆபிரகாம் :** ஆண்டவரே! இது என்ன தொல்லை? நான் என்ன செய்வது? மத்தளம்போல் அடிக்கப்படுகிறேனே.

**சாறாள் :** இவளை இனி இந்த வீட்டில் இருக்க விட மாட்டேன். உடனே இந்த அடிமையையும் இதன் மகனையையும் துரத்திவிடுங்கள்.

**ஆபிரகாம் :** சாறாள்! நீ சொல்வது தகுமா? என்ன இருந்தாலும் இஸ்மாயில் என் பிள்ளை தானே.

**சாறாள் :** அவள் எமது இனத்தாள் அல்லள். அவள் எகிப்திய அடிமை. அவள் தன் அடிமைப் புத்தியைக் காட்டி விட்டாள். இனி ஒரு கணமும் அவள் இந்த வீட்டில் இருக்க கூடாது. எங்கே யாவது துரத்தி விடுங்கள். நீங்கள் என்னை அன்பு செய்வது உண்மையானால் எனது வேண்டுகோளை நிறைவேற்றுங்கள்.

திரை

# காட்சி ஏழு



ஆகார் மகனை அணைத்தபடி அசையா நிலையில் நிற்க உரைஞர் இருவர் மேடைக்கு வருகிறார்கள்.

**உரைஞன் 1:** தீமையிலிருந்தே நன்மையைப் பொழியும் இறைவன். சாறாளின் வேண்டுதலின்படி ஆகாரயும் அவள் பிள்ளையையும் துரத்தும்படி ஆபிரகாமைத் தூண்டினார். ஓர் அப்பத்துண்டுடனும், தண்ணீர் நிறைந்த ஒரு தோல் பையுடனும் ஆகாரையும், தன் மகன் இஸ்மாயிலையும் மனமின்றித் துரத்தி விட்டார்.

**உரைஞன் 2:** ஆகார் மகனுடன் ஓடினாள். ஓடினாள். கானல் பொழியும் பாலையில் திரிந்து, வெம்மையில் குளித்து வன்துயர் உற்று, தண்ணீர் இன்றிக் கண்ணீரில் ஆடி தாயும் சேயும் பாலையில் திரிந்தனர்.

**உரைஞன் 1:** நாவரண்டு, கால்கள் துவண்டு, மெய்சோர்ந்து கண்கள் சொருகி, உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தன் மகனைக் காணச் சகிக்காமல் இறைவனை நோக்கி வானம் பிளக்க ஓலமிட்டாள். கதறிக் குமுறினாள்.

உரைஞர்கள் மேடையை விட்டு விலக, ஆகாரும் மகனும் அசைந்து நாவறண்டு சோர்வதுபோல் பாவனை செய்தல். ஒரு மரத்தடியில் மகனைக் கிடத்துதல்.

**ஆகார் :** (அழுது) ஆண்டவரே! இந்தக் கொடுமையை நான் எப்படிச் சகிப்பேன்? அமுதப்பாலூட்டி வளர்த்த என் செல்வனுக்கு, இந்தப்பாலை வனத்தின் கானல் நீரையா குடிக்கக் கொடுப்பது? என் கண்முன்னே என் பிள்ளை தாகத்தால் நாவரண்டு துடித்துச் சாவதைப் பார்ப்பதற்கு நான் என்ன கொடுமை செய்தேன்? அடிமையின் மகன் என்றதனாலா இந்தச் துயரச்சாவு? ஆண்டவரே! நீர் என்னோடு பேசியது உண்மையானால், உமது வாக்குப் பொய்யாதிருக்கட்டும். ஆண்டவரே! (அழுதல்)

அப்பொழுது கடவுள் வானத்தில் ஒரு தூதனை அனுப்பி, ஆகாரோடு பேசவைத்தார்.

**தூதன்குரல் :** ஆகாரே! உன்னை வருத்துவது யாது? தாகத்தால் துடித்து முனங்கிய உன் மகனின் குரல் நம் இறைவனின் காதுகளில் கேட்டது. நீ எழுந்து பையனைத் தூக்கி எடுத்து, மகன் கையைப் பிடி. ஏனெனில் அவனை ஒரு பெரிய இனத்துக்குத் தந்தையாக்குவோம் என்கிறார் ஆண்டவர்.

தூதன் குரல் நிற்க, ஆகார் உணர்ச்சி வசப்பட்டவளாய்க் கண்களை ஏறெடுத்து, மேடைக்கு வெளியே ஒரு பக்கம் பார்க்கிறாள்.

**சாறாள் :** ஆ! . . . என்ன? என் கண்களில் படுவது என்ன? கிணறா?. . .

ஆம். . . ஆண்டவரே . . . கிணறு தான் கிணறுதான்..

தோல் பையை எடுத்துக் கொண்டு மேடைக்கு வெளியே போய்த் தண்ணீரோடு வருகிறாள்.

மகனே! என் செல்வமே! இஸ்மாயிலே! இதோ! தண்ணீர். . . குடி கண்ணே. ஆண்டவர் அருள் கிடைத்ததே.

என்று சொல்லி முழங்காலில் குந்தி இருந்த படி தன் மடியில் மகனைத் தூக்கிக் கிடத்தித் தண்ணீர் பருக்குதல்.

திரை

முற்றும்

*Published by :*
**CENTRE FOR PERFORMING ARTS**
238, Main Street,
Jaffna.

வெளியீடு

**CENTRE FOR PERFORMING ARTS**

திருமறைக் கலாமன்றம்

SALE
1 00

Printed by : Sharp Graphics (Pvt) Ltd. Tel : 421565